ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 7.] நள ௵ மாசி ௴ [ஸஞ்சிகை 5.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புகள்.

**லோகாந்தரம்.** ப்ராக்ருத ஸ்தூல சரீர வியோகத்தை அடைந்தவர்கள், [அதாவது, இறந்துபோனவர்கள்] த்வாரம் (Medium) மூலமாக மநுஷ்யருடன் ஸம்பாஷிக்கின்றனர் என்பது, ஐரோப்பா தேசங்களில் மாத்ரம் ஆசாரத்துக்கு வந்திருக்கின்றது; நமது தேசத்தில் காணோம். ஐரோப்பாவிலும் 50, 100 வருஷங்கட்குமுன் அத்தகைய அநுபவம் இலது. ஆனால் பிசாசுகள் மநுஷ்யரை ஆவேசித்து ஹிம்ஸிப்பதெனும் அநுபவம் எக்காலமும் எல்லாத் தேசங்களிலும் உண்டு. பிசாசுகளால் ஆவேசிக்கப்பட்டவர்களும் த்வாரம் எனும் வகுப்பில் சேர்ந்தவர்களே. ஆனால் அவர்கள் தம் இச்சையால் அவ்வண்ணம் ஆகின்றார் இல்லை. அப்படியாகிலும் த்வாரம் கிடைக்குமிடங்களில், மநுஷ்யருடன் ஸம்பாஷிக்க இச்சைகொ

ண்ட ப்ரேதர்கள், அத்வாரத்தின் மூலமாகத் தம்முடைய இருப்பை அவர்க்குக் கொஞ்சமேனும் தெரிவிக்க முயலமாட்டாரோ? முயன்றதாகத் தெரியவில்லை.

* * * * * *

இறந்தவர் த்வாரமூலமாக ஐரோப்பா தேசங்களில் மநுஷ்யருடன் பேசும் விவரங்களைப்பற்றி, ஸர் ஆலிவர் லாட்ஜ் இவ்வகை விவரிக்கின்றார்:—தாங்கள் இருக்கும் ஸ்திதி, தங்களுடைய ஸம்ஸர்க்கம், சுற்று ப்ரதேசங்கள், இவ்வுலக வ்யாபாரங்களில் தங்களுடைய ஆஸக்தி, உலகத்தார்க்குத் தமது வ்ருத்தாந்தங்களைத் தெரிவிப்பதில் உண்டான கஷ்டம், இவற்றைப்பற்றி இறந்தவர் பேசுகின்றார்களாம். அவர்கள் வார்த்தைகளுடைய உண்மையைப் ப்ரிசோதிக்க நமக்கு ஸாத்யமில்லையாம். ஆனாலும் அவ்வார்த்தைகளால் அவர்களுடைய் தத்கால ஸ்திதியானது ஏறக்குறைய நமது ஸ்திதியை ஒத்ததாகவே இருக்கின்றதாய்த் தெரியவருகின்றதாம். அவர்கள், புஷ்பங்கள், ம்ருகங்கள், புஸ்தகங்கள், இவற்றைப்பற்றியும், தமக்குள்ள பல ஆசைகளைப்பற்றியும், வஸ்துக்களின் அழகைப்பற்றியும் பேசுகின்றனராம். நாம் அறிந்ததைக் காட்டிலும் அவர்கள் அறிந்த விஷயம் மிகவும் விஸ்தரித்ததல்லவாம். அவர்கள் தன்மையும் குணங்களும் ருசியும் ஶக்திகளும், இவ்வுலகில் இருந்தவண்ணமே அநுவர்த்திக்கின்றனவென்று அவர்கள் சொல்கின்றனராம். ஆகிலும், ஸ்தூல ஶரீர ஸம்பந்த ஸ்திதியில் காட்டிலும், தத்கால ஸ்திதியில் அவர்கள் ஸுகாநுபவத்துக்கும், ஜ்ஞாந வ்ருத்திக்கும் அதிக அநுகூலத்தையும், ப்ரதிகூலங்களின் குறைவையும், பூதங்களால் உண்டாகப்பட்ட துன்பங்களின் நிவ்ருத்தியையும் அடைந்திருக்கின்றனராம்.

இன்னும் அவர்கள் இருக்கும் ப்ரதேசங்களில், ப்ராக்ருத வஸ்துக்கள் முன்போல ஸ்தூலமாக இருந்தபோதிலும், பார்வைக்கு ம்ருகத்ருஷ்ணிகை போல் காணப்பட்டு மறைந்துபோகின்றனவென்றும், ஆதலால் ஸாதாரணமாக லோக வ்ருத்தாந்தங்கள் அவர்களுக்குத் தெரிவதில்லையென்றும் சொல்கின்றனராம்.

லோகாந்தர ப்ராப்திக்கு அபிமுகரானவர்க்கு உதவிசெய்ய ஆஜ்ஞு ப்தராயும், தம் இச்சையால் பூர்வ பந்துக்களை நெருங்க இச்சித்தவ ராயும், அவர்கள் நரலோகம் வருங்காலத்தில் அவர்களுக்கு ப்ரா க்ருத வஸ்துக்கள் முன்போலத் தெரிகின்றனவெனவும் சொல் கின்றனராம். அவர்கள் மநுஷ்யரிடம் ஸ்நேஹம் பக்ஷம் முத லான குணங்களைக் காட்டுகின்றனராம். இவ்வுலகுக்கு நெருங் கிய ப்ரதேசங்களில் தான் அவர் வஸிக்கின்றனராம்.

அவரது பழைய சரீரங்கள் ஸ்தூல ப்ரக்ருதி பரிணாமமாக உண்டான வண்ணமே, [அதாவது, பூதங்களின் அணுக்கள் சேர்ந்து உண்டான வண்ணமே] தத்காலம் அவர்கள் இருக்கும் நிலையில், ஆகாசம்போன்ற ஸூக்ஷ்ம த்ரவ்யங்களைக்கொண்டு அவர்களுக்கு நூதந சரீரங்கள், பழைய சரீரங்களுடைய ஆகாரங்களை அநுஸரி த்து உண்டாயிருக்கின்றனவாம். இப்படிப்பட்ட சரீரப்ராப்தி, ம்ருதரான மநுஷ்யர்களைப்போல் ம்ருதமான மற்ற ஜந்துக்களுக் கும் உண்டாயிருக்கக்கூடுமாம். ஆதலால் லோகாந்தர ஸம்ஸ்தா நம், இவ்வுலகின் ஸம்ஸ்தாநத்தை ஒத்தே நிற்கலாமென்று ஸர் ஆலிவர் லாட்ஜ் முடிக்கின்றார்.

* * * * * * *

இந்த யோசனைகள், தாமறிந்த விஷயங்களைக்கொண்டு ஸர் ஆலிவர் லாட்ஜ் ஊஹம்செய்யும் ப்ரகாரங்கள். மரணமடைந்த வர்கள் அவ்வவர்களுடைய கர்மங்களின்படிப் படிப்படியாய் உயர் கின்ற பல வகுப்புகளை அடைகின்றார்களென்று ஸர் ஆர்தர் கோ னன் டாயில் அபிப்ராயப்பட்டார். அவ்வகுப்புகளுக் கேற்றபடி லோகங்களும் இருக்கவேண்டும். அந்த லோகங்களின் ப்ரகார த்தை பித்ரு கந்தர்வ தெய்வ ப்ரஜாபதி சதுர்முகாதி லோகங்க ளென்று நமது ப்ரமாணங்கள் விவரிப்பதை முன்பே சொல்லி யிருக்கின்றோம். அப்படிப்பட்ட லோகங்களை யடைந்தவர்கள் ப்ராயேண மநுஷ்ய லோகத்துக்குத் திரும்பிவந்து மநுஷ்யர்களு டன் ஸம்பாஷிப்பதில்லை. தேவகணங்களெனப்பட்ட வித்யாதர யக்ஷ கிந்நராதி கணங்களும், அவர்க ளிருப்பிடம் சென்ற மநுஷ்

யர்க்குக் கதாசித் ப்ரகாசமாகின்றனர் என்பது இதிஹாஸ புராண ப்ரஸித்தி. மரண மடைந்தவர்கள் அவ்வவர்க்குரிய லோகங்களை அடையாமல் நமது ஸமீப ப்ரதேசங்களில் நின்றுகொண்டு, நம்முடைய ஸுகதுக்கங்களில் அந்வயிப்பதென்பதை நமது ப்ரமாண க்ரந்தங்கள் காட்டவில்லை. சரீரத்யாகாநந்தரம் பித்ருலோக ப்ராப்திக்கு அநுகூலமான உத்தரக்ரியைகளின் அபாவத்தாலும், அக்ரியைகளுக்கு அநர்ஹதையை உண்டாக்குகின்ற துர்மரணாதிகளாலும், மரணமடைந்தவர், நமது ஸமீப ப்ரதேசங்களில் ப்ரேத சரீரங்களெனப்பட்ட ஒருவித ஸூக்ஷ்ம சரீர விசிஷ்டராக ஸஞ்சரிக்கின்றாரென்று நம்முடைய தேசஸ்தர்கள் நம்புகின்றார்கள்.

* * * * * *

ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் யாஜ்ஞவல்க்யர் ஜநகராஜனுக்கு ஆத்ம ஸ்வரூபோபதேசம் செய்கின்ற ப்ரகரணத்தில், ஜநகப்ரச்நம் 'கிம்ஜ்யோதிரயம்புருஷ:' என்று உபக்ரமிக்கின்றது. அதாவது: மநுஷ்யன் உட்காருவதற்கும் நடப்பதற்கும் கர்மம் செய்வதற்கும் ஸாதகமாயிருக்கின்ற ஜ்யோதிஸ் எது என்று கேள்வி. பகலில் ஸூர்யனுடைய ஜ்யோதிஸ் என்றும், இரவில் சந்த்ரஜ்யோதிஸ் என்றும், ஸூர்ய சந்த்ரர்கள் அஸ்தமித்தால் அக்நியினுடைய ஜ்யோதிஸ் என்றும், அக்நியுமில்லாத காலத்தில் புருஷன் யாதேனுமோர் சப்தத்தைக் கேட்டு தத்ப்ரதேசத்தை நெருங்குகின்றானென்றும், ப்ரச்நங்களின் க்ரமப்படி ப்ரதிவசநங்கள் பிறந்தன. மேற்சொன்ன ஸர்வ ஸாதநங்களுடைய அபாவத்தில், பாஹ்யேந்த்ரியங்கள் உபரதியடைந்தகாலத்தில் "கிம்ஜ்யோதிரேவாயம் புருஷ:' என்று மறுபடி ப்ரச்நம் உதிக்க, 'ஆத்மைவாஸ்ய ஜ்யோதிர்பவதி' ஆத்மாவே, தனது தர்மபூத ஜ்ஞாநத்தைக்கொண்டு ஸ்திதி கமந ப்ரவ்ருத்திகளுக்கு ஸாதகமான ப்ரகாசத்தை யுடைத்தாயிருக்கின்றான் என்று மஹர்ஷி சொன்னார்.

* * * * * * *

அநுக்ராஹகங்களா யிருந்த ஸர்வ பாஹ்யேந்த்ரியங்களும் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில் ஶாந்தியடைந்து, ஸர்வ பாஹ்ய ஜ்யோதிஸ்ஸுகளின் அஸ்தமநத்தால் ப்ரவ்ருத்தி நிரோதநத்தை யடைந்த புருஷன், ஸ்வப்ந காலங்களில் விவித அநுபவங்களை யடைகின்றான்; ஸுஷுப்தியில் யாதொரு அநுபவமும் இல்லாமற் போனபோதிலும், எழுந்தவுடன் 'ஸுகமாகத் தூங்கினேன், ஒன்றையும் நான் அறிந்தேனில்லை' என்று, தத்ஸம காலாநுபவத்தை ஸாக்ஷாத்கரிக்கின்றான். ஆதலால் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில், பாஹ்ய ஜ்யோதிஸ்ஸுகளுடைய அபாவத்தால், தத் காலகார்யங்கட்கு ஸாதகமாக யாதொரு அந்ய ஜ்யோதிஸ்ஸையும் அபேக்ஷிக்காமல், ஆத்ம ஜ்யோதிஸ்ஸே அநுக்ராஹகமாய் நிற்கின்றது. இப்படி, சரீர விலக்ஷணமான ஆத்மா ஸ்வயமே ப்ரகாசிக்க, அவனை ஒப்புக்கொண்டு, இந்த லோகத்தின் ஸர்வ வ்யாபாரத்தையும் பரலோக வ்யாபாரங்களையும் பற்றி வேதாந்திகள் விசாரிக்கின்றனர். அந்த ஆத்மாவின் அஸ்தித்வத்தை பாஹ்ய ஸாக்ஷ்யங்களைக் கொண்டு ஐரோப்ய பண்டிதர்கள் அநுமிக்க வேண்டியதாயிற்று.

* * * * * * *

உபநிஷத் ப்ரகரணத்தில் 'கதம ஆத்மா' என்று ஜநகன் ஆத்ம ஸ்வரூப விஷயமான ப்ரச்நம் செய்கின்றார். மஹர்ஷியின் ப்ரத்யுத்தரம், "யோऽயம் விஜ்ஞாநமய: ப்ராணேஷு ஹ்ருத்யந்தர்ஜ்யோதி: புருஷ:, ஸ ஸமாநஸ்ஸந் உபௌ லோகாவநுஸஞ்சரதி, த்யாயதீவ லேலாயதீவ, ஸ ஹி ஸ்வப்நோ பூத்வேமம் லோகமதிக்ராமதி ம்ருத்யோ ரூபாணி" என்று பிறந்தது. அதாவது: இந்த்ரிய முக்ய ப்ராணாதிகளுக்கு நடுவில், ஹ்ருதய கமலத்தில், விஜ்ஞாநமயனாய் [அதாவது, ஜ்ஞாந ஸ்வரூபியாய்] ஜ்ஞாநத்தையே ஸ்வதர்மமாக வுடையவனாய், அந்தத் தர்மரூப ஜ்ஞாந மூலமாக ப்ரகாசிக்கின்றவனாய், சரீரத்தை ஆச்ரயித்திருக்கின்ற ஜீவன்தான் ஆத்மா என்று கருத்து. அவன் பரதந்த்ரன்; அவனுடைய கர்த்ருத்வமும் பராயத்த கர்த்ருத்வம். ஆகிலும் ஸ்வதந்த்ரனென்

றும், ஸ்வாதீந கர்த்தாவென்றும், அபிமாநத்துடன் கூடினவனுய், ஜாக்ரத் லோகத்திலும், ஸ்வப்ந லோகத்திலும் ஸஞ்சரிக்கின்ருன்; தன்னே ஸ்வதந்த்ரனுகச் சிந்திக்கின்ருன்; அவ்வண்ணமே வ்யாபாரங்களில் அந்வயிக்கின்ருன். அந்த ஜீவன் ஸ்வப்நாவஸ்தையை அடைந்து காணப்படும் ப்ரபஞ்சத்தையும், அதன்கண் உள்ள ஸம்ஸார துக்கங்களேயும் அதிக்ரமிக்கின்ருன், என்று யாஜ்ஞவல்க்யர் சொல்லி முடிக்கின்ருர். இவ்வண்ணம் நம்முடைய பாஷ்யகாரர் திருவுள்ளம். ஸ்ரீ ஶங்கராசார்யாபிப்ராயத்தில், விஜ்ஞாநமென்ருல் புத்தி: ஆத்மா அதனுடன் சேர்ந்தவன்; முக்ய ப்ராணனுடைய ஸமீபத்தில், ஹ்ருதி- புத்திக்குள்ளே, ஸ்வயமே ப்ரகாசிக்கின்றவன் ஆத்மா; மற்ற கரணங்கள் புத்திக்கு த்வாரமாத்ரங்களாயிருக்கின்றன; புத்தியானது ஸ்வச்சத்ரவ்யம்; ஆத்மாவின் ஸமீபத்தில் நிற்கின்றது; ஆதலால் ஆத்மாவினுடைய சைதந்ய ரூபமான ஜ்யோதிஸ்ஸானது அதில் ப்ரகாசிக்கின்றது; இவ்வண்ணம் முதலில் புத்தியில், தானே ஆத்மாவெனும் மித்யாபிமாநம் உண்டாகி, முடிவில் சரீராதிகளிலும் உண்டாகின்றது. ஸர்வ கார்ய காரண ஸங்காதங்களும் ஆத்மாவின் சைதந்ய ஸ்வரூப ஜ்யோதிஸ்ஸால் ப்ரகாசிக்கின்றன. ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுகள் இருக்கையிலும், புத்தியும் இந்த்ரியங்களும் ஆத்ம ஜ்யோதிஸ்ஸால் அநுக்ரஹிக்கப்படாவிட்டால், கார்ய கரங்களாகமாட்டா; வ்யவஹாரத்தின் பொருட்டும் உதவமாட்டா. ஆதித்யாதி ஜ்யோதிஸ்ஸுகள் ஸ்வப்ந ஸுஷுப்தி காலங்களில் கார்யகரங்க ளன்று. அப்போது ஆத்மஜ்யோதிஸ் ஒன்றே அநுக்ராஹகமாய் இருக்கின்றது. அப்படிப்பட்ட ஆத்மா, தனது சைதந்யரூப ப்ரகாசத்தால் புத்தியை ப்ரகாசிப்பித்துக்கொண்டே, புத்தியுடன் தன்னே ஸமாநமாகவெண்ணிக்கொண்டு, த்யாந வ்யாபாரங்களுடன் கூடினவனுக எண்ணிக்கொண்டு இரண்டு லோகங்களிலும் ஸஞ்சரிக்கின்ருன். புத்திக்கு ஸ்வாப வ்ருத்தியுண்டானபோது ஆத்மாவும் ஸ்வப்நாவஸ்தையைப் பொருந்துகின்ருன்; புத்தி ஜாக்ரதவஸ்தையில் நிற்கையில் தானும் நிற்கின்ருன். அவ்வவஸ்தையில் அவித்யா ரூபமா

னதும் வ்யவஹார லக்ஷணத்துடன் கூடியதுமான லோகத்தை அநுபவிக்கின்றனன். அதையும் அவன் ஸ்வப்நகாலத்தில் அதிக்ரமித்துத் தனது ஜ்யோதிஸ்ஸால் ஸ்வப்நரூபமான புத்தியின் வ்ருத்தியை ப்ரகாசிப்பித்துக்கொண்டு நிற்கின்றான்.

இது அத்வைத வ்யாக்யாநம். புத்திக்கு மேற்பட்டதோர் ஆத்மாவைப் பௌத்தர் ஒப்புக்கொள்கின்றாரில்லை. வேதாந்திகள், '𑌯𑌥𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍍𑌯𑍇𑌕𑌃 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌲𑍋𑌕𑌮𑌿𑌮𑌂 𑌰𑌵𑌿𑌃 । 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍀 𑌤𑌥𑌾 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑌿 𑌭𑌾𑌰𑌤' எனும் ப்ராமாணப்படி, ஸர்வ கரணங்களுடன் கூடிய சரீரத்தினுடைய ஸர்வ ப்ரவ்ருத்திகளுக்கும், சரீரநிஷ்டனான ஜீவன் தனது ஜ்ஞாநத்வாரா அநுக்ராஹகனாயிருக்கின்றான் என்பார்கள். அவனிடம் இல்லாததும் புத்தியினிடம் உள்ளதுமான த்யாநக்ரியைகளை அவனதென்று ப்ராந்தியால் நினைக்கின்றானென்கின்றார் ஸ்ரீஸங்கராசார்யர். த்யாநக்ரியைகள் அவனுடையதேயாயினும், அவற்றுள் ஸ்வாதந்த்ரிய புத்தி மட்டும்ப்ரமைபால் அவனுக்கு உண்டாகின்றதென்று நம்முடைய பாஷ்யகாரர் ஸித்தாந்தம்.

உபநிஷத்தில் 'இவ' எனும்பதம் இப்படி பேதிக்கின்ற அர்த்தங்கட்குக் காரணம். ஆனாலும் ப்ரகரணஸ்த சப்தங்களின் பர்யாலோசனையால் எந்த அர்த்தம் ஸ்வரஸமானதென்பதை ஒவ்வொருவரும் யோசித்துக்கொள்ளலாம்.

ஆத்மாவானவன் ஜாக்ரத் ஸ்வப்நரூப உபய லோக ஸஞ்சாரத்திலும் ஸமாநமாகவே நிற்கின்றான்; ஜாக்ரத் லோகத்தை அதிக்ரமித்து ஸ்வப்நாவஸ்தையை அடைந்த காலத்தில், த்யாந க்ரியா வ்யாபாரவான்போல் காணப்படுகின்றான் என்று பொருள்படுத்தவும் கூடும்.

* * * * * *

ஸ்ரீஸங்கராசார்யர் த்யாநசலந வ்யாபாரங்கள் புத்தியுடையதென்பதால் மூளைக்கு வ்யாபாரம் கல்பிக்க அமையாது. மூளை